தமிழ்மொழி ஆண்டு 3 7 ஜூலை 2021

பெயர்: ____________________

**<u>கதையை நிரல்படுத்துக.</u>**




| | |
|---|---|
| ஒரு சிலர் திருடனைப் பிடிக்கத் துரத்தினர். | |
| அப்பெண்மணியின் அருகில் நின்று கொண்டிருந்த ஒருவன் அப்பெண்மணியின் சங்கிலியைப் பிடுங்கிக் கொண்டு ஓடினான். | |
| திடீரென,ஒரு பெண்மணி உதவி கேட்டு அலறும் சத்தம் கேட்டது. | |
| அதைக் கண்ட மக்கள் செய்வதறியாது நின்றனர். | |
| அன்று திங்கட்கிழமை என்பதால், பேருந்து நிலையத்தில் மக்கள் கூட்டம் நிறைந்திருந்தன. | |
| காவல் அதிகாரி ஒருவர் திருடனைத் துரத்திச் சென்று பிடித்தார். | |
| ரோந்து பணியில் இருந்த காவல் அதிகாரி ஒருவர், சத்தம் கேட்டு அங்கு விரைந்திருக்கலாம் என ஒரு சிலரால் பேசப்பட்டது. | |
| நொடி பொழுதில் காவல் வண்டி "ஒயிங்......ஒயிங்......" என்ற ஒலியுடன் அவ்விடத்தை வந்தடைந்தது. | |
| காவல் அதிகாரி அப்பெண்மணியிடம் "காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்து விட்டு, உங்கள் சங்கிலியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறி திருடனை இழுத்துச் சென்றார். | |
| நகை மீண்டும் கிடத்த மகிழ்ச்சியுடன் அப்பெண்மணி காவல் நிலையத்திற்கு விரரைந்தார். | |
| நகையைப் பறிக்கொடுத்த பெண்மணி " பல நாள் திருடன் இன்று கையும் களவுமாய்ப் பிடிப்பட்டான்" என்று ஆவேசத்துடன் கூறினாள். | |

LIVEWORKSHEETS